# இலங்கை சட்டக் கல்லூரி சாதாரண அனுமதிப்பரீட்சை

## 2026 ஆம் கல்வியாண்டுக்காக மாணவர்களை அனுமதித்தல்

இலங்கை சட்டக் கல்லூரிக்கு 2025 ஆம் கல்வியாண்டுக்காக மாணவர்களை அனுமதிப்பதற்காக 2025 மார்ச் 17ஆம் ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் 2025 ஏப்ரல் 16 ஆம் திகதி பி.ப. 9.00 மணி வரை இலங்கை சட்டக் கல்லூரியின் நிகல்நிலை ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிப்பதற்கான தகைமைகள்**

இலங்கை சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆகக் குறைந்த தகைமைகளாவன

(அ) இலங்கை கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் / ஐக்கிய இராச்சிய கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு திறமை சித்திகளுடனும் ஒரு சாதாரண சித்தியுடனும் சித்தியடைந்திருத்தல்

(ஆ) இலங்கை கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் / தேசிய பொதுத் தராதர பரீட்சையில் அல்லது ஐக்கிய இராச்சிய கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் சிங்கள அல்லது தமிழ் மொழியில் திறமை சித்தி பெற்றிருத்தல்.

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதியன்று விண்ணப்பதாரிகள் 17 வயதை பூர்த்தியடைந்திருத்தல்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை சட்டக் கல்லூரியின் இணையதளத்தை உசாவவும்.(www.sllc.ac.lk)

**அனுமதிப் பரீட்சை**

சகல விண்ணப்பதாரிகளும் 2025 ஜூலை மாதம் நடாத்தப்படவுள்ள அனுமதிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சட்டக் கல்லூரி அனுமதிப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. பொது அறிவு | - | காலம் 01 மணித்தியாலம் |
| 2. பொது நுண்ணறிவு | - | காலம் 01 மணித்தியாலம் |
| 3. ஆங்கில மொழித் திறன் | - | காலம் 01 1/2 மணித்தியாலம் |
| 4. சிங்கள அல்லது தமிழ் மொழித் திறன் | - | காலம் 01 1/2 மணித்தியாலம் |

**பரீட்சைக் கட்டணமும் சட்டக் கல்லூரி கட்டணமும்**

பரீட்சைக் கட்டணம் ரூ.1200/= ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் முறை பற்றிய பணிப்புரைகள், இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையதளத்தில் பரீட்சை சம்பந்தமான தொழினுட்ப பணிப்புரையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன. சட்டக் கல்லூரிக் கட்டணம் ரூ.12,000/= ஆகும். அந்தத் தொகை ஹட்டன் நெஷனல் வங்கியில் (ஹல்ஸ்டோப் கிளையில்) கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விச் சபையின் பெயரில் உள்ள 063020073300 கணக்கிலத்திற்கு விண்ணப்பதாரியின் பெயரில் செலுத்திய பற்றுச் சீட்டை entrance@sllc.ac.lk மின்னஞ்சலுக்கு சமர்ப்பித்த பின்னர் மாத்திரம், தமது விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை ஊடாக பரீட்சை திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். *(நிகழ்நிலை ஊடாக சட்டக் கல்லூரிக்கு சமர்ப்பிக்கப்படும் பற்றுச் சீட்டில் பரீட்சை விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடனான பெயரும், தேசிய அடையாள அட்டை இலக்கமும், தொலைபேசி இலக்கமும் தெளிவாக கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.)*

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பப்பத்திரம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதளத்தில் **"Our Services"** இன் கீழ் உள்ள **"Online Applications - Recruitment Exam/EB Exams"** (நிகழ்நிலை ஊடாக) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

*சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிக் கூற்றுக்களுக்கு இடையில் ஏதும் பொருந்தாமை அல்லது ஒவ்வாமை நிலவுவதாக காணப்படின், அச்சந்தர்ப்பத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலின்படி செயலாற்றப்படும்.*

அதிபர்,
இலங்கை சட்டக் கல்லூரி,
ஹல்ஸ்டோப் வீதி,
கொழும்பு 12.